[19th July 1962

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The draft rules are being examined. Steps are being taken to publish and issue the rules as early as possible.

பூசமலைக்குப்பத்தில் அரசாங்கக் கட்டிடம்.

* 440 கேள்வி.—திரு. சா. கணேசன் (திரு. முனு. ஆதி சார்பாக) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் பூசமலைக்குப்பத்தில் ஒரு லட்சத்து முப்பத்தைந்து ஆயிரம் ரூபாய்க்கு அரசாங்கம் வாங்கிய கட்டிடத்தில் தற்போது ஏதேனும் அரசாங்க அலுவலகம் உள்ளதா ?

(இ) இல்லையென்றால், அந்தக் கட்டிடம் எதற்குப் பயன்படுத்தப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The building at Poosamalaikuppam which was bought along with palace buildings and lands of Jagirdar of Arni at S. V. Nagaram for Rs. 1,32,000 is now used as a Forest Rest House for the stay of the inspecting officers of the Forest Department and there is no proposal at present to utilise the bungalow for any other purpose. The value of the building at Poosamalaikuppam was only Rs. 46,300 at the time of purchase.

(b) Does not arise.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ABSENCE OF MAIN OPPOSITION PARTY MEMBERS.

* கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே உள்ள முக்கியமான எதிர்க்கட்சியில் 50 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாரும் இன்று இம்மன்றத்திற்கு வரவில்லை. அப்படி இருந்தபோதிலும், கேள்வி நேரம் 55 நிமிடங்கள் நடந்தது மிகவும் பாராட்டுதற்குரியது. கனம் சுதந்திராக் கட்சி தலைவர் அவர்கள் இன்று பெரும்பாலும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் போடவேண்டிய கேள்விகளைப் போட்டார்கள். தாங்களும் பெருந்தன்மையோடு அக்கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கச் செய்தீர்கள். மீதியுள்ள எதிர்க் கட்சி அங்கத்தினர்களும், மற்றும் எங்கள் பகுதியிலுள்ள அங்கத்தினர்களும், உப கேள்விகளைப்போட்டு, 55 நிமிடங்கள் இந்தக் கேள்வி நேரம் குறைவில்லாமல் நடந்தது. இது நமக்கெல்லாம் பெருமை அளிக்கக் கூடியது, பாராட்டுதலுக்கும் உரியது. ஆனால் எதிர்க் கட்சிக்கு முக்கியத்துவம் அளிப்பதனால், நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். முக்கியமான எதிர்க் கட்சியாக இருந்து, அதிலே 50 உறுப்பினர்கள் இருந்தும், ஒருவர் கூட